பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 28—2—1981ஆம் தேதி காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1–39 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

207. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்கு முறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, உள் துறையின் (திரைப்படங்கள்) 2—9—1980ஆம் தேதியிடப் பெற்ற 2254ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 9/1955] 10 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

208. தமிழ்நாடு 1957ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 3—10—1980ஆம் தேதியிடப்பெற்ற, 2592ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1955ஆம் ஆண்டு திரைப்படங்கள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 9/1955] 10 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

209. தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் 1971-72 முதல் 1976—77ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை (ஆங்கிலத்தில்) (தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்பாடு-அகற்றுதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 41-ஆவது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 பிப்ரவரி 27]

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*53. தமிழ்நாடு ஒழுக்கக் கண்காணிப்பு குழுவின் 1—4—1977 முதல் 31—3—1978ஆம் தேதி வரையிலான பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை (தமிழ்—ஆங்கிலம்).

†54. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 20/1981).

5. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு தனிக்குடியிருப்புப் பகுதி உடைமை உரிமைச் சட்டமுன்வடிவிற்கு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 20/81) பிழைதிருத்தம்.

††56. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 201 முதல் 350 வரை).

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS